# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 246/ந/2017

ஆணை எண். 78/2018

நாள் : 28/03/2018

திரு K. பாலசுப்ரமணியம்,
திருச்செங்கோடு – 637 209. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
திருச்செங்கோடு நகராட்சி,
திருச்செங்கோடு. – எதிர் மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், சீத்தராம்பாளையம் அஞ்சல், ராயல் நகர், 126/4 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு K. பாலசுப்ரமணியன் அவர்களின் 08.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு, 12.12.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 246/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரர் 27.03.2018 அன்று விசாரணைக்கு ஆஜராகி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அன்னார் சமர்ப்பித்த ஆவணங்கள் மற்றும் மனுதாரர் விசாரணையின்போது அளித்த வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, சீத்தராம்பாளையம் எண்.126/4, இராயல் நகர் முகவரியில் வசிக்கும் திரு K. பாலசுப்ரமணியம் என்பவர், கீழ்க்காணும் முறையீடுகளைத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்:-

(1) திருச்செங்கோடு நகராட்சிப் பகுதியில் உள்ள புலிக்காட் பஞ்சாலை பேருந்து நிறுத்தத்தில் இருக்கை வசதியுடன் கூடிய பேருந்து நிழற்குடை அமைக்கப்பட வேண்டும் ;

(2) மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு பொய்யானத் தகவலினை அளித்த நகராட்சி ஆணையர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

மேற்குறிப்பிட்ட கோரிக்கை மற்றும் குற்றச்சாட்டு சம்பந்தமாக மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

2. முறையீட்டு மனுதாரர் தனது 06.06.2017 நாளிட்ட கடிதத்தில் திருச்செங்கோடு – சங்ககிரி சாலையில், திருச்செங்கோடு நகராட்சி எல்லைக்குட்பட்ட புலிக்காட் பஞ்சாலை பேருந்து நிறுத்தத்தில் இருக்கை வசதியுடன் கூடிய நிழற்குடை அமைக்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு முறையீடு செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுவினைப் பெற்ற திருச்செங்கோடு நகராட்சி ஆணையர் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு மாவட்ட ஆட்சியரின்

ஒப்புதல் பெற்று ரூ. 2.50 இலட்சம் மதிப்பீட்டில் சீத்தாராம் பாளையம் புல்க்காட் பஞ்சாலை அருகே உள்ள மாரியம்மன் கோவில் அருகில் புதியதாக பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணியினை மேற்கொண்டுள்ளார். மனுதாரர் பயணியர் நிழற்குடை அமைக்கக் கோரிய புலிக்காட் பேருந்து நிறுத்தத்திற்கும், புதிதாக நிழற்குடை அமைக்கப்பட்ட பேருந்து நிறுத்தத்திற்கும் இடைப்பட்ட தூரம் 200 மீட்டர் அளவே. ஒரு திட்டப் பணியினை மேற்கொள்வது சம்பந்தப்பட்ட நிர்வாக அலுவலர்களே. அத்திட்டப் பணிகளை அப்பகுதி மக்களின் தேவைக்கேற்ப மேற்கொள்வதும் அந்நிர்வாக அலுவலர்கள்தான். நிர்வாக அலுவலர்களின் நடைமுறை செயல்பாட்டில் இம்முறைமன்ற நடுவம் தலையிட இயலாது. எனினும், அத்திட்டப் பணிகள் மேற்கொண்டதில் ஊழல் அல்லது நிர்வாக சீர்கேடு உள்ளதாக கண்டறியப்பட்டால் மட்டுமே இம்முறைமன்ற நடுவம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

3. 2016–17–ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 2.50 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி பெற்று நிழற்குடை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது என 03.07.2017 நாளிட்ட கடிதத்தில் முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட விவரம் 13.06.2017 நாளிட்ட முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுவிற்கும் பதிலாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் 06.06.2017 நாளிட்ட மனுவினை மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு தாக்கல் செய்யப்படும் முன்பே சீத்தாராம் பாளையம் பேருந்து நிறுத்தத்தில் நிழற்குடை அமைப்பதற்கான கருத்துரு முற்றுப்பெற்று விட்டதாகவே கருத நேரிடுகிறது. எனவே, சீத்தாராம் பாளைய பேருந்து நிறுத்தத்தில் நிழற்குடை அமைத்ததில் நகராட்சி நிர்வாகம் எந்தவித தவற்றினையும் மேற்கொள்ளவில்லை என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும், புலிக்காட் பஞ்சாலை பேருந்து நிறுத்தத்திலும் பயணியர் நிழற்குடை அமைப்பதற்கு மனுதாரர் முறையாக கோரிக்கை மனுவினை மாவட்ட ஆட்சியர்/ நகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்கும் நிலையில், அது அங்கு தேவை, அதற்கு நிதி உள்ளது போன்ற நிலையில் விதிகளுக்குட்பட்டு பரிசீலனை செய்து நடவடிக்கையினை மேற்கொள்ள திருச்செங்கோடு நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 28–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

6.4.18

செயலாளர்.

5.4.18

6/4/18

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
திருச்செங்கோடு நகராட்சி,
திருச்செங்கோடு.

2. திரு K. பாலசுப்ரமணியம்,
126/4, ராயல் நகர்,
சீத்தாராம் பாளையம் அஞ்சல்,
திருச்செங்கோடு – 637 209.
நாமக்கல் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்